# மிக முக்கியமான விதிகள் மற்றும் நிபந்தனைகள்

வடிவம் 1.3

## 1. கட்டணங்கள்

**A. கார்டு உறுப்பினர், கிரெடிட் கார்டுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள்**

கட்டணமானது, ஒவ்வொரு கார்டு உறுப்பினருக்கும், ஒவ்வொரு ஆஃபருக்கும் மாறுபடலாம். இது, கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும் போதே கார்டு உறுப்பினருக்கு தெரியப்படுத்தப்படும். பொருந்தக்கூடிய மேற்கண்ட கட்டணங்கள், கார்டு அக்கவுண்டிற்கு பில் செய்யப்படும் மற்றும் வசூலிக்கப்பட்ட மாதத்திற்கான கார்டு ஸ்டேட்மென்ட்டில் அவை குறிப்பிடப்படும்.

**B. கேஷ் அட்வான்ஸ் கட்டணங்கள்**
பொருந்தாது.

**C. கட்டணங்கள்**

(i) அந்தந்த காலகட்டத்தில் பொருந்தக்கூடிய வெவ்வேறு கட்டணங்கள், எச்டிஎஃப்சி பேங்க் தன் கார்டு உறுப்பினருக்கு அளிக்கும் குறிப்பிட்ட சேவைகளுக்காக அல்லது தன் கார்டு அக்கவுண்ட் தொடர்பாக கார்டு உறுப்பினர் செலுத்த தவறிய தொகைகளுக்காக, கார்டு உறுப்பினரால் செலுத்தப்பட வேண்டும்.

(ii) அவ்வப்போது, பொருந்துமென்றால், வாடிக்கையாளருக்கு உரிய தகவல் அனுப்பி, எந்தவொரு கட்டணத்தையும் மாற்றக்கூடிய அல்லது புதிய கட்டணங்களை அறிமுகம் செய்யக்கூடிய உரிமை எச்டிஎஃப்சி பேங்கிற்கு உள்ளது.

## 2. வட்டியில்லாத காலம்

பர்ச்சேஸ் கார்டுகள்: குறிப்பிட்ட கிரெடிட் கார்டு மீது பொருந்தும் திட்டத்திற்கு உட்பட்டு (தயவு செய்து கட்டணங்களின் அட்டவணையைப் பார்க்கவும்) மற்றும் வியாபாரியின் கிளெயிம் சமர்ப்பித்தல் அடிப்படையில், வட்டியில்லாத கிரெடிட் காலம் 15 முதல் 50 நாட்கள் வரை இருக்கலாம். எனினும், முந்தைய ஸ்டேட்மென்ட்டின் பாக்கி முழுமையாக செலுத்தப்படாவிட்டால் இது பொருந்தாது.

உதாரணமாக, எச்டிஎஃப்சி பேங்க் பர்ச்சேஸ் கார்டுக்கு வட்டியில்லா கிரெடிட் காலம் 45 நாட்கள் வரையாகும். இதன் அர்த்தமாவது, ஒரு வாடிக்கையாளரின் பில்லிங் தேதி, ஒவ்வொரு மாதத்தின் 5 ஆம் தேதியாக இருந்தால், அவர் தன் கார்டு மூலம் ஏப்ரல் 6 முதல் மே 5 வரை செலவு செய்யலாம், அவரது பில் மே 5 ஆம் தேதி உருவாக்கப்படும், மற்றும் அவரது பேமென்ட் செலுத்த கடைசி நாள் மே 20 ஆம் தேதியாக இருக்கும். இதனால், ஏப்ரல் 11 அன்று செய்யப்பட்ட ஒரு செலவுக்கு 40 நாட்கள் கிரெடிட் காலம் கிடைக்கும், அதே நேரத்தில், மே 2 அன்று செய்யப்பட்ட ஒரு செலவுக்கு 19 நாட்கள் கிரெடிட் ஃப்ரீ காலம் கிடைக்கும். முந்தைய பாக்கிகள் அனைத்தும் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தால் மட்டுமே இந்தக் காலம் வட்டியில்லா காலமாக இருக்கும்.

யூட்டிலிட்டி கார்டுகளுக்கு, வட்டியில்லாத கிரெடிட் காலம் 10 முதல் 40 நாட்கள் வரையிருக்கலாம், இது வியாபாரியின் கிளெயிம் சமர்ப்பித்தலுக்கு உட்பட்டது. எனினும், முந்தைய ஸ்டேட்மென்ட்டின் பாக்கி முழுமையாக செலுத்தப்பட்டிருக்காவிட்டால் இது பொருந்தாது.

## 3. வரம்புகள்

கார்ப்பரேட்டின் / கார்டு உறுப்பினரின் கிரெடிட் வரம்பை தன் இஷ்டப்படி நிர்ணயிக்கும் உரிமை எச்டிஎஃப்சி பேங்கிற்கு உள்ளது. இந்த வரம்புகள் பற்றிய விபரங்கள், கார்டு வழங்கும் போதும், காலாந்திர ஸ்டேட்மென்ட்டுகளிலும் கார்டு உறுப்பினருக்கு தெரிவிக்கப்படும். ஸ்டேட்மென்ட் உருவாக்கப்படும் சமயத்தில் கிடைக்கக்கூடிய கிரெடிட் வரம்பு, காலாந்திர ஸ்டேட்மென்ட்டின் ஒரு பகுதியாக தெரிவிக்கப்படும். தங்கள் கிரெடிட் வரம்பை அதிகரிக்கக் கோரும் கார்ப்பரேட்கள், உரிய நிதி ஆவணங்களை இணைத்து வங்கிக்கு எழுதிக் கேட்டுக் கொள்ளலாம். வங்கியானது, தனது சொந்த முடிவின் படி மற்றும் அளிக்கப்பட்டுள்ள புதிய ஆவணங்களின் அடிப்படையில், கார்டு உறுப்பினரின் கிரெடிட் வரம்பை அதிகரிக்கலாம்.

## 4. நிதி கட்டணங்கள்

A. கார்டு உறுப்பினர் தனது பாக்கியை முழுவதுமாக செலுத்த விரும்பாத பட்சத்தில், பரிவர்த்தனை தேதி முதல், மாதாந்திர சதவீத விகிதத்தில் நிதிக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் (தயவுசெய்து கட்டணங்கள் அட்டவணையைப் பார்க்கவும்). கார்டு பாக்கி முழுவதுமாக திருப்பிச் செலுத்தப்படும் வரை, நிதிக் கட்டணங்கள், கார்டு உறுப்பினரின் அக்கவுண்ட்டிற்கு டெபிட் செய்யப்படும்.

B. பர்ச்சேஸ் கார்டு / யூட்டிலிட்டி கார்டு மீதான செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகை, செலுத்த வேண்டிய மொத்த தொகையின் 100%.

C. அடுத்த ஸ்டேட்மென்ட் தேதிக்குள் செலுத்த வேண்டிய தொகை முழுவதும் செலுத்தப்படாவிட்டால், கார்ப்பரேட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து பர்ச்சேஸ் கார்டுகள் மற்றும்/அல்லது யூட்டிலிட்டி கார்டுகள், பிளாக் செய்யப்பட்டுவிடும்.

D. பேமென்ட் செலுத்த வேண்டிய டியூ தேதியில் செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்ச பாக்கித் தொகை செலுத்தப்படாவிட்டால் பேமென்ட் தாமத கட்டணங்கள் வசூலிக்கப்படும். பேமென்ட் தாமத கட்டணங்களைத் தவிர்க்க, பேமென்ட் டியூ தேதியன்று அல்லது அதற்கு முன் எச்டிஎஃப்சி பேங்க் கார்டு அக்கவுண்ட்டில் தெளிவான நிதி செலுத்தப்பட வேண்டும். பேமென்ட் தாமத கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு பொருந்தும்:

| ஸ்டேட்மென்ட் பாக்கி | பேமென்ட் தாமத கட்டணங்கள் |
|---|---|
| ரூ. 100/-க்கு குறைவாக | - இல்லை |
| ரூ. 100/- - ரூ. 500/- | - ரூ. 100/- |
| ரூ. 501/- - ரூ. 5000/- | - ரூ. 400/- |
| ரூ. 5001/- - ரூ. 10000/- | - ரூ. 500/- |
| ரூ. 10001/- - ரூ. 20000/- | - ரூ. 500/- (ஜனவரி 1, 2016 முதல் ரூ. 700/-) |
| ரூ. 20001/-மற்றும் அதற்கு மேல் | - ரூ. 700/- |

E. ஓவர்லிமிட் கட்டணங்கள், கிரெடிட் வரம்பைத் தாண்டும் மொத்த பாக்கியின் மீது, ஓவர்லிமிட் தொகையின் 2.5% என்ற விகிதத்தில், குறைந்தபட்சமாக ரூ. 500/-க்கு உட்பட்டு, வசூலிக்கப்படும்.

**வெவ்வேறு கட்டணங்கள் எவ்வாறு கணக்கிடப்படுகின்றன என்பதை கீழ்க்கண்ட எடுத்துக்காட்டு சுட்டிக்காட்டும்.**

முந்தைய பாக்கி அனைத்தையும் முழுவதுமாக செலுத்திவிட்டீர்கள், உங்கள் பிளாட்டினம் பிளஸ் கார்டு அக்கவுண்ட்டில் பாக்கி எதுவுமில்லை என்று வைத்துக் கொள்வோம். உங்கள் ஸ்டேட்மென்ட் தேதி, பிரதி மாதம் 5. உங்கள் கார்டு அக்கவுண்ட்டில் நீங்கள் மேற்கொண்ட பரிவர்த்தனைகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு இருக்கிறது.

| தேதி | பரிவர்த்தனை விபரங்கள் | தொகை |
|---|---|---|
| ஏப்ரல் 02 | பொருட்கள் வாங்கியது | ரூ.10000/- |
| ஏப்ரல் 05 | ஸ்டேட்மென்ட் தேதி | செலுத்த வேண்டிய மொத்த தொகை (டிஏடி) = ரூ. 10000/- செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகை, செலுத்த வேண்டிய மொத்த தொகையின் 100% |
| ஏப்ரல் 20 | பேமென்ட் செலுத்த வேண்டிய தேதி | - |
| ஏப்ரல் 25 | பொருட்கள் வாங்கியது | ரூ. 20000/- |
| மே 05 | டிஏடி (இந்த உதாரணத்தில் ரூ. 10000/-) கிடைக்கப்பெறா-விட்டால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கார்டுகள் அனைத்தும் பிளாக் செய்யப்படும். | |

மே 05 தேதியிட்ட ஸ்டேட்மென்ட்டில், செலுத்த வேண்டிய மொத்த தொகையின் அங்கங்களாக கீழ்க்கண்டவை காணப்படும்:

கணக்கிடப்பட்ட வட்டி = (பாக்கி தொகை x 2.95%* x 12 மாதங்கள் x நாட்களின் எண்ணிக்கை) / 365. உரிய பேமென்ட் தாமத கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு, ஸ்டேட்மென்ட் பாக்கி ரூ.5000/- வரை இருந்தால், ரூ. 400/-, ஸ்டேட்மென்ட் பாக்கி ரூ. 5001/- மற்றும் ரூ.20000/-க்கிடையே இருந்தால், ரூ. 500/-, ஸ்டேட்மென்ட் பாக்கி ரூ.20000/- க்கு அதிகமாக இருந்தால், ரூ. 700/-.

(1)ஏப்ரல் 6 முதல் மே 5 வரை (அதாவது, 30 நாட்களுக்கு), மாதம் 2.95% என்ற விகிதத்தில், ரூ. 10000/- மீதான வட்டி = ரூ. 290.96/-

(2)ஏப்ரல் 25 முதல் மே 05 வரை (அதாவது, 11 நாட்களுக்கு), மாதம் 2.95% என்ற விகிதத்தில், ரூ. 20000/- மீதான வட்டி = ரூ. 213.37/- மொத்த வட்டி = ரூ. 290.96/- + 213.37/- = ரூ. 504.33/-

(3)பேமென்ட் தாமத கட்டணங்கள் = ரூ. 600/-

(4)வட்டி மற்றும் பேமென்ட் தாமத கட்டணங்கள் மீது, சர்வீஸ் வரி @ 14%, ஸ்வச் பாரத் செஸ் @ 0.5%, மற்றும் கிரிஷி கல்யாண் செஸ் @ 0.5% = ரூ. 165.65/-

(5)மொத்த அசல் தொகை பாக்கி = ரூ. 20000/- (புதிய செலவு ) + ரூ. 10000/- (சென்ற மாத ஸ்டேட்மென்ட்டின் பாக்கி தொகை) = ரூ. 30000/-

ஆக, செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை = (1) + (2) + (3) + (4) + (5) = ரூ.31269.98/-

**தயவுசெய்து கவனிக்கவும்:**

நிதிக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள், எச்டிஎஃப்சி பேங்க் நிர்ணயப்படி மாறுதலுக்கு உட்படலாம்.

கார்டு உறுப்பினர், அக்கவுண்ட்டுகளின் கிரெடிட் வரம்பை மீறினால், அக்கவுண்ட் மீது

ஓவர்லிமிட் கட்டணங்கள் வசூலிக்கப்படும். குறிப்பிட்ட சூழ்நிலையில் வசூலிக்கப்படும் கட்டணங்களின் பட்டியலுக்கு, தயவு செய்து இந்த ஆவணத்தின் முடிவில் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டணங்களின் அட்டவணையைப் பார்க்கவும்.

**5. பில்லிங் மற்றும் ஸ்டேட்மென்ட்**

A. எச்டிஎஃப்சி பேங்க், முந்தைய ஸ்டேட்மென்ட்டிற்குப் பிறகு கார்டு உறுப்பினரின் அக்கவுண்ட்டில் கிரெடிட் செய்யப்பட்ட பேமென்ட்டுகள் மற்றும் டெபிட் செய்யப்பட்ட பரிவர்த்தனைகளைக் காட்டும் காலாந்திர ஸ்டேட்மென்ட்டை கார்டு உறுப்பினருக்கு / கார்ப்பரேட்டுக்கு அனுப்பும். கார்டு அக்கவுண்ட்டில் செய்யப்படும் பரிவர்த்தனைகளின் ஸ்டேட்மென்ட்டை வங்கியிடம் உள்ள பதிவுகளின் படி தபால் முகவரி / இ-மெயில் முகவரிக்கு காலாந்திர அடிப்படையில் வங்கியானது தபால் மூலம் / இ-மெயில் மூலம் அனுப்பும். செலுத்த வேண்டிய பாக்கி ரூ. 200/-க்கு குறைவாக இருந்தால், மற்றும் முந்தைய ஸ்டேட்மென்ட்டிற்குப் பிறகு செலுத்த வேண்டிய பாக்கி எதுவும் இல்லாவிட்டால், ஸ்டேட்மென்ட் அனுப்பப்படமாட்டாது.

B. பர்ச்சேஸ் கார்டுகள்: பேமென்ட் செலுத்த வேண்டிய தேதி, ஸ்டேட்மென்ட் தேதியிலிருந்து 15 நாட்களுக்குப் பிறகு இருக்கும். உதாரணமாக, மாதத்தின் 5 ஆம் தேதியில் ஸ்டேட்மென்ட் உருவாக்கப்பட்டால், பேமென்ட் செலுத்த வேண்டிய தேதி, மாதத்தின் 20 ஆம் தேதியாக இருக்கும்.

யூட்டிலிட்டி கார்டுகள்: பேமென்ட் செலுத்த வேண்டிய தேதி, ஸ்டேட்மென்ட் தேதியிலிருந்து 10 நாட்களுக்குப் பிறகு இருக்கும். உதாரணம்: மாதத்தின் 20 ஆம் தேதியில் ஸ்டேட்மென்ட் உருவாக்கப்பட்டால், பேமென்ட் செலுத்த வேண்டிய தேதி, மாதத்தின் 30 ஆம் தேதியாக இருக்கும். தயவுசெய்து கவனிக்கவும்: யூட்டிலிட்டி கார்டுகளுக்கான ஸ்டேட்மென்ட் ஒவ்வொரு 20 நாட்களில் உருவாக்கப்படும் மற்றும் அதற்குரிய பேமென்ட் செலுத்த வேண்டிய தேதி 10 நாட்களுக்குப் பிறகாக இருக்கும்.

C. கார்டு உறுப்பினர்கள் / கார்ப்பரேட்டுகள், பேமென்ட் செலுத்த வேண்டிய தேதிக்கு போதுமான நாட்கள் முன்பே உள்ளூர் காசோலைகளை அளிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், அப்போது தான் உரிய பேமென்ட் தேதிக்குள் செலுத்தப்பட்ட பேமென்ட் கார்டு அக்கவுண்ட்டில் பிரதிபலிக்கும்.

தயவுசெய்து கவனிக்கவும்: அடுத்த ஸ்டேட்மென்ட் தேதிக்குள் முந்தைய ஸ்டேட்மென்ட் பாக்கி கிடைக்கப்பெறாவிட்டால், கார்ப்பரேட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பர்ச்சேஸ் / யூட்டிலிட்டி கார்டுகள் அனைத்தும் பிளாக் செய்யப்படும்.

D. கார்டு பாக்கிக்காக செய்யப்படும் பேமென்ட்டுகள், அடுத்துவரும் ஸ்டேட்மென்ட்டுகளில் உறுதி செய்யப்படும்.

E. கார்டு உறுப்பினரின் கார்டு பாக்கிக்காக பெறப்படும் பேமென்ட்டுகள், அனைத்து வரிகள், வருடாந்திர கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள், வட்டி கட்டணங்கள், மற்றும் செலவுகள் ஆகியவற்றிற்காக, இந்த வரிசையில், அட்ஜஸ்ட் செய்யப்படும்.

F. கார்டு அக்கவுண்ட்டிற்காக செய்யப்படும் பேமென்ட்டுகள், கீழ்க்கண்ட எந்தவொரு முறையிலும் செலுத்தப்படலாம்:

(i) பேமென்ட் இன்ஸ்ட்ருமென்ட்டை (காசோலை அல்லது டிராஃப்ட்), எச்டிஎஃப்சி பேங்க் கிளைகள் மற்றும் ஏடிஎம்-களில் வைக்கப்பட்டிருக்கும் எச்டிஎஃப்சி பேங்க்கின் ஏதேனும் ஒரு கிரெடிட் கார்டு டிராப் பாக்ஸில் போடலாம். காசோலை / டிராஃப்ட் ஆனது, எச்டிஎஃப்சி பேங்க் கார்டு எண் **XXXX XXXX XXXX XXXX** க்கு பேயபிள் ஆக இருக்க வேண்டும்.

(ii) கார்டு உறுப்பினருக்கு எச்டிஎஃப்சி பேங்க் அக்கவுண்ட் இருந்தால், அவர் ஸ்டாண்டிங் இன்ஸ்ட்ரக்ஷன் வசதியை தேர்வு செய்யலாம். இதன் மூலம், உரிய தேதியில், கார்டு உறுப்பினரின் கார்டு அக்கவுண்ட்டிற்கு நிதி தானாகவே மாற்றப்பட்டுவிடும்.

(iii) கார்டு உறுப்பினருக்கு எச்டிஎஃப்சி பேங்க் அக்கவுண்ட் இருந்தால், அவர் தனது பேமென்ட்டை, நெட்பேங்கிங், ஏடிஎம்-கள் அல்லது ஃபோன்பேங்கிங் மூலம் செலுத்தலாம்.

(iv) வங்கிக் கிளைகளில் கேஷ் பேமென்ட்டுகள் மூலம் செலுத்தலாம்.

G. பில்லிங் பிரச்சனைகள்: ஸ்டேட்மென்ட்டில் ஏதேனும் முரண்பாடுகள் இருப்பின், கார்டு உறுப்பினர், ஸ்டேட்மென்ட் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் எழுத்து மூலமாக அதை எச்டிஎஃப்சி பேங்கிற்கு தெரிவிக்காவிட்டால், ஸ்டேட்மென்ட்டிலிருக்கும் அனைத்து பரிவர்த்தனைகளும் சரியாக உள்ளன என்று ஒப்புக் கொண்டதாக எடுத்துக் கொள்ளப்படும். இது போன்ற தகவல் கிடைக்கப்பெற்றால், எச்டிஎஃப்சி பேங்க் அந்தக் கட்டணத்தை தற்காலிக அடிப்படையில், ஆய்வு செய்யப்படுவதற்காக, ரிவர்ஸ் செய்யும். அதையடுத்து செய்யப்படும் ஆய்வுகள் முடிவுற்றதும், அது போன்ற கட்டணங்களுக்கு கார்டு உறுப்பினர் அக்கவுண்ட் பொறுப்பாகும், தொடர்புடைய ரெட்ரீவல் கோரிக்கை கட்டணங்களுடன் சேர்த்து கட்டணமும் அடுத்துவரும் ஸ்டேட்மென்ட்டில் மீண்டும்

சேர்க்கப்படும்.

H. தொடர்பு விபரங்கள்: எந்தவொரு கேள்விகளுக்கும் அல்லது குறை தீர்ப்பதற்கும், கார்டு உறுப்பினர், எச்டிஎஃப்சி பேங்க் கிரெடிட் கார்டுகளை கீழ்க்கண்டவை மூலமாக தொடர்பு கொள்ளலாம்:

- 24 மணிநேர கஸ்டமர் சர்வீஸ் கால் சென்டர் - இந்த ஆவணத்தின் முடிவிலும், காலாந்திரம் ஸ்டேட்மென்ட்டின் பின்பக்கத்திலும், தொலைபேசி எண்களின் ஒரு விபரமான பட்டியல் இடம்பெற்றுள்ளது.
- இ-மெயில் மூலம்: **corporateassist@hdfcbank.com**
- தபால் மூலம் - மேனேஜர், எச்டிஎஃப்சி பேங்க் கார்டுகள் பிரிவு, தபால் பெட்டி எண் 8654, திருவான்மியூர் பி.ஓ., சென்னை - 600 041.

## 6. டீஃபால்ட் (கார்டு அக்கவுண்ட் பாக்கியை செலுத்த தவறுவது)

கார்டு அக்கவுண்ட் பாக்கியை செலுத்த தவறும் பட்சத்தில் (டீஃபால்ட்), கார்டு அக்கவுண்ட்டில் இருக்கும் ஏதேனும் பாக்கி தொகையை செலுத்தக் கோரி கார்டு உறுப்பினர்களுக்கு / கார்ப்பரேட்டுகளுக்கு அவ்வப்போது நினைவூட்டல்கள் அனுப்பப்படும். இது தபால், ஃபேக்ஸ், தொலைபேசி, இ-மெயில், SMS மற்றும்/அல்லது நினைவுபடுத்துதல், பின் தொடர்வு மற்றும் பாக்கியை பெறுவது போன்றவற்றிற்கு மூன்றாம் தரப்புகளை நியமித்தல் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும். இது போன்று நியமிக்கப்படும் மூன்றாம் தரப்பு, கடன் திரும்பப் பெறுதலின் நடத்தை விதி தொகுப்பை முழுவதுமாக பின்பற்றும்.

## 7. மீட்புரிமை

குறிப்பிட்ட காலத்திற்குள் கார்டு அக்கவுண்ட்டிலிருக்கும் பாக்கியை திருப்பிச் செலுத்துமாறு வங்கி உத்தரவிட்டும் செலுத்தப்படாவிட்டல், வங்கியானது, எந்த நேரத்திலும், எந்தவித நோட்டீஸுமின்றி, வங்கியின் எந்தவொரு அக்கவுண்ட்/கஸ்டடியில் இருக்கும் கார்ப்பரேட்டுக்கு சொந்தமான அனைத்து நிதிகள் மீதும் வங்கிக்குப் பற்றுரிமை உள்ளது.

## 8. கார்டு மெம்பர்ஷிப்பை ரத்து செய்தல் / திரும்பப் பெறுதல்

A. கார்ப்பரேட்டின் அங்கீகரிக்கப்பட்ட, கையொப்பமிட்ட அதிகாரி, கார்டு மெம்பர்ஷிப்பை எந்த நேரத்திலும், கீழ்க்கண்ட முகவரியில் எச்டிஎஃப்சி பேங்கிற்கு எழுதி, ரத்து செய்யலாம்: மேனேஜர், எச்டிஎஃப்சி பேங்க் கிரெடிட் கார்டுகள் பிரிவு, தபால் பெட்டி எண் 8654, திருவான்மியூர் பி.ஓ., சென்னை - 600 041. கடிதத்துடன் கார்டுகளை குறுக்கு வாக்காக வெட்டி துண்டுகளாக்கி அனுப்ப வேண்டும். வெட்டப்பட்ட கார்டுகள் மற்றும் கார்டு அக்கவுண்ட் பாக்கியை தீர்க்க பேமென்ட்டுகள் அனைத்தும் பெறப்பட்ட பிறகே கார்டு ரத்து செய்யப்படும்.

B. வர்த்தக அல்லது பாதுகாப்புக் காரணங்களுக்காக, நியாயமான அடிப்படையில் அவசியம் என்று வங்கி கருதினால், எந்த நேரத்திலும், எந்தவித முன்னறிவிப்புமின்றி, வங்கியானது கிரெடிட் கார்டு உபயோகத்தை கட்டுப்படுத்தலாம், ரத்து செய்யலாம் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம். கார்ப்பரேட் நிறுவனம், பேமென்ட் பாக்கியை செலுத்த தவறினால் அல்லது அளிக்கப்பட்ட கிரெடிட் வரம்பை மீறினால், கிரெடிட் கார்டு வசதியை எச்டிஎஃப்சி பேங்க் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம். ஒப்பந்தம் நிறைவு பெற்றால் அல்லது கார்டு அக்கவுண்ட் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டால், கார்டை உபயோகிக்கக்கூடாது.

C. இது போன்ற சூழ்நிலையில், கார்ப்பரேட் நிறுவனம் (ஏதேனும் டீஃபால்ட் அல்லது சட்டத்திற்கு தேவைப்படும் இதர அறிக்கை ஆகியவற்றிற்கு உட்பட்டு), கார்டு அக்கவுண்ட்டில் இருக்கும் மொத்த பண பாக்கியையும் உடனடியாக எச்டிஎஃப்சி பேங்கிற்கு செலுத்திவிட வேண்டும். இது, அனைத்து பரிவர்த்தனைகள் மற்றும் அக்கவுண்ட்டில் இன்னும் சார்ஜ் செய்யப்படாத இதர தொகைகள் உட்பட, ஒப்பந்தத்தின் கீழ் எச்டிஎஃப்சி பேங்கிற்கு உரிய அனைத்து தொகைகளும் அடங்கியது. இது போன்ற செலுத்த வேண்டிய பாக்கி அனைத்தையும் கார்ப்பரேட் முழுமையாக செலுத்திய பிறகே கார்டு ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

D. கார்டு உறுப்பினர்கள் தங்கள் சொந்த விருப்பத்திற்கேற்ப, ஒரு தேர்வுக்குரிய இன்ஷூரன்ஸ் தயாரிப்பை வாங்கலாம், இது கிரெடிட் கார்டில் ஏதேனும் மோசடி பரிவர்த்தனைகள் செய்யப்பட்டால் அதனால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யும். இத்தகைய இன்ஷூரன்ஸ் காப்பீடு குறித்த மேற்பட்ட விபரங்கள் மற்றும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, வங்கியின் எங்கள் பிரதிநிதியை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## 9. கார்டு இழப்பு/திருட்டு/தவறான பயன்பாடு

A. கிரெடிட் கார்டு தவறினால், தொலைந்தால், திருட்டுப் போனால், சேதமடைந்தால், கிடைக்க வேண்டிய நேரத்தில் கிடைக்காவிட்டால் அல்லது கார்டு உறுப்பினரின் / கார்ப்பரேட் உபயோகிப்பாளரின் அனுமதியின்றி கிரெடிட் கார்டு உபயோகிக்கப்படுகிறது என்ற சந்தேகம் எழுந்தால், கார்டு உறுப்பினர் / கார்ப்பரேட், 24-மணிநேர கால் சென்டரை உடனே அழைத்து தகவல் தெரிவிக்க வேண்டும். ஒரு முறை கார்டு தொலைந்துவிட்டது என்று

அறிவிக்கப்பட்ட பிறகு, பின்னொரு சமயத்தில் கார்டு உறுப்பினருக்கு / கார்ப்பரேட் உபயோகிப்பாளருக்கு அது திரும்பக் கிடைத்தாலும், எந்த சூழ்நிலையிலும் அது உபயோகிக்கப்படக்கூடாது.

B. கார்டு தொலைந்து போனதாக தெரிவிக்கப்படும் முன்பு கார்டு அக்கவுண்ட்டில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு வங்கி பொறுப்பாகாது, அதற்கான முழுப் பொறுப்பும் கார்டு உறுப்பினரை / கார்ப்பரேட்டைச் சார்ந்தது. கார்டு இழப்பு பற்றிய முறையான அறிவிப்பு ஒரு முறை வங்கிக்கு கிடைத்த பிறகு, அந்த கார்டு மீதான கார்டு உறுப்பினரின் / கார்ப்பரேட்டின் பொறுப்பு எதுவுமில்லை. கார்டு இழப்பு அல்லது தொலைந்து போனது பற்றி எச்டிஎஃப்சி பேங்கிற்கு தெரிவிப்பதுடன் கூடுதலாக, கார்டு உறுப்பினர் / கார்ப்பரேட், கார்டு திருட்டு போனது பற்றி காவல் துறையில் புகார் செய்து, FIR தாக்கல் செய்ய வேண்டும்.

C. கார்டு உறுப்பினர் / கார்ப்பரேட்டின் அனுமதியுடன் PIN எண் அல்லது கார்டைப் பெற்று யாரேனும் கார்டை தவறாக பயன்படுத்தினால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் கார்டு உறுப்பினர் / கார்ப்பரேட் பொறுப்பாவார்.

D. கார்டு உறுப்பினர் / கார்ப்பரேட் உபயோகிப்பாளர் மோசடி செய்ததனால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் கார்டு உறுப்பினர் / கார்ப்பரேட் பொறுப்பாவார்.

E. எச்டிஎஃப்சி பேங்க், கார்டு உறுப்பினர் / கார்ப்பரேட்டுக்கு அறிவிக்காமலேயே, ஒரு கார்டு அல்லது PIN எண்ணின் இழப்பு, திருட்டு அல்லது தவறான பயன்பாடு பற்றிய, எச்டிஎஃப்சி பேங்க் அவசியம் என்று கருதும் எந்தவொரு தகவலையும், காவல் துறைக்கு அல்லது உரிய அதிகாரிகளுக்கு அளிக்கும்.

**10. குறை நிவர்த்தி பிரிவு**

சமீபத்தில் வங்கியுடன் தொடர்பு கொண்ட போது உங்களுக்கு சரியான பதில் கிடைக்காமல் அதிருப்தி ஏற்படும் அரிய சந்தர்ப்பத்தில், நீங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதலாம் - மேனேஜர், எச்டிஎஃப்சி பேங்க் கிரெடிட் கார்டுகள் பிரிவு, தபால் பெட்டி எண் 8654, திருவான்மியூர் பி. ஓ., சென்னை - 600 041; திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை ஃபோன் 044-23744704.

**11. டிஸ்குளோஷர்**

நடப்பிலிருக்கும் தொழில் நடைமுறைகளின்படி, அந்தந்த சமயத்தில், கிரெடிட் கார்டு(கள்) தொடர்பான எந்தவொரு தகவலையும், எந்தவொரு கிரெடிட் அமைப்பிற்கும் (தற்போதைய அல்லது எதிர்கால), வாடிக்கையாளருக்கு எந்தவித அறிவிப்பும் செய்யாமல், வங்கி வழங்கலாம் என்பதை கார்ப்பரேட் ஒப்புக் கொள்கிறது. தி கிரெடிட் இன்ஃபர்மேஷன் பீரோ ஆஃப் இந்தியா லிட்., (CIBIL) என்பது, நிதியமைப்பின் இயக்கம் மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்த இந்திய அரசு மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் நிறுவப்பட்ட ஒரு முன்முயற்சியாகும். இந்த முன்முயற்சியில் அங்கமாக இருக்கும் அனைத்து வங்கிகளும், நிதி நிறுவனங்களும், வாடிக்கையாளர் தரவை CIBIL உடன் பகிர்ந்து கொள்வது அவசியமாகிறது. இதற்கிணங்க, கார்டு பாக்கியை குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்தாமலிருந்தால், 15 நாள் நோட்டீஸ் உடன், வாடிக்கையாளர் கிரெடிட் கார்டு(கள்) டீஃபால்ட் செய்தது தொடர்பான எந்தவொரு தகவலையும் CIBIL மற்றும் வேறு எந்தவொரு கிரெடிட் பீரோவுக்கும் (தற்போதைய மற்றும் எதிர்கால) வெளியிடுவதற்கான அதிகாரம் வங்கிக்கு உள்ளது என்பதை கார்டு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். செலுத்த வேண்டிய பாக்கி முழுவதும் கார்ப்பரேட்டிடம் இருந்து பெற்ற பிறகே, வங்கி பொருத்தமானது என்று கருதினால், ஏதேனும் டீஃபால்ட்டர் பட்டியலிலிருந்து கார்ப்பரேட்டின் பெயர் விலக்கிக் கொள்ளப்படும். இறுதி பாக்கித் தொகை முழுவதையும் கார்ப்பரேட் நிறுவனம் வங்கிக்கு செலுத்திய 60 நாட்களுக்குள் பெயரை பட்டியலிலிருந்து விலக்குதல் மேற்கொள்ளப்படும். கார்ப்பரேட் மற்றும் வங்கிப் பிரதிநிதிக்கிடையே நடைபெறும் குறிப்பிட்ட குறைகள்-தொடர்பான உரையாடல் அல்லது பேமென்ட் ரிக்கவரி தொடர்பான உரையாடல்கள் அல்லது வேறு ஏதேனும் உரையாடல்களை, வங்கி அவசியம் என்று கருதுபவற்றை, வங்கி தன் விருப்பப்படி பதிவு செய்யும் என்பதையும் நாங்கள் கார்ப்பரேட்டுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

# கட்டணங்கள் அட்டவணை (பதிப்பு 1.3)

| கட்டணங்களின் விளக்கம் | கமர்ஷியல் கார்டு |
|---|---|
| வட்டியில்லா கிரெடிட் காலம் | பர்ச்சேஸ் கார்டுகளுக்கு 50 நாட்கள் வரை மற்றும் யூட்டிலிட்டு கார்டுகளுக்கு 40 நாட்கள் வரை |
| யூட்டிலிட்டி கார்டுகள் மீது பேமெண்ட் கட்டணங்கள் | மின்கட்டண பேமெண்ட்டுகளுக்கு, பேமெண்ட் மதிப்பின் 0.7%<br>மற்ற அனைத்து பேமெண்ட் பிரிவுகளுக்கும் கட்டணங்கள் இல்லை |
| செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்ச தொகை | முந்தைய ஸ்டேட்மெண்ட் பாக்கியின் 100% |
| சேர்க்கை கட்டணம் | இல்லை |
| பேமெண்ட் செலுத்தாமைக்கான கட்டணங்கள் | சென்ட்ரல் டிராவல் அக்கவுண்ட்ஸ் (சி டி ஏ) - பரிவர்த்தனை தேதியிலிருந்து* மாதத்திற்கு 1.50%<br>பர்ச்சேஸ் மற்றும் யூட்டிலிட்டி கார்டுகளுக்கு - பரிவர்த்தனை தேதியிலிருந்து* மாதத்திற்கு 2.95%<br>*மாறுதலுக்கு உட்பட்டது |
| பேமெண்ட் தாமத கட்டணங்கள் | **அறிக்கை இருப்பு** — **தாமதித்த பேமெண்ட் கட்டணங்கள்**<br>ரூ. 100/- க்கும் குறைவு — இல்லை<br>ரூ. 100/- மற்றும் ரூ.500/- — ரூ. 100/-<br>ரூ. 501/- மற்றும் ரூ. 5000/- — ரூ. 400/-<br>ரூ. 5001/- மற்றும் ரூ.10000/- — ரூ. 500/-<br>ரூ. 10001/- முதல் ரூ. 20000/- வரை — ரூ. 500/- (ஜனவரி 1, 2016 முதல் ரூ. 700/-)<br>ரூ. 20001/-மற்றும் அதற்கு மேல் — ரூ. 700/-<br>சென்ட்ரல் டிராவல் அக்கவுண்ட்ஸ்க்கு (சி டி ஏ-கள்) இல்லை |
| கேஷ் பிராசஸிங் கட்டணம் | ஆகஸ்ட் 1, 2016 முதல், பர்ச்சேஸ், யூட்டிலிட்டி மற்றும் டீலர் கார்டு பாக்கிகளுக்கான பேமெண்ட்டுகள் கேஷாக செலுத்தப்பட்டால், தொகையின் 1% மதிப்பு கூடுதல் கட்டணமாக வசூலிக்கப்படும். |
| ஃபியூயல் பரிவர்த்தனை கட்டணங்கள் | ஒவ்வொரு பரிவர்த்தனை மீதும் 1% ஸர்சார்ஜ் வசூலிக்கப்படும். உரிய சர்வீஸ் வரி மற்றும் செஸ் வசூலிக்கப்படும். |
| தொலைந்து போன, திருட்டுப் போன அல்லது சேதமடைந்த கார்டுக்கு பதிலாக புதிய கார்டு அளித்தல் | ரூ. 100/ |
| பேமெண்ட் ரிடர்ன் கட்டணம் | பேமெண்ட் தொகையின் 2%, குறைந்தபட்சம் ரூ. 450/க்கு உட்பட்டது |
| வெளியூர் காசோலை பிராசஸிங் கட்டணம் | ஒரு இன்ஸ்ட்ருமெண்ட்டுக்கு ரூ. 50/ |
| ரெட்ரீவல் கட்டணம் (சார்ஜ் ஸ்லிப்) | ஒரு சார்ஜ் ஸ்லிப்பிற்கு ரூ. 125/ |
| வெளிநாட்டு கரன்ஸி பரிவர்த்தனைகள் | கிராஸ் கரன்ஸி மார்க்-அப் ஆக வங்கி 3.5% வசூலிக்கிறது |
| சர்வீஸ் வரி, ஸ்வச் பாரத் செஸ் மற்றும் கிரிஷி கல்யாண் செஸ் | பொருந்தும் வகையில் |
| இரயில் டிக்கெட் வாங்குவதற்கான கட்டணம் (யூட்டிலிட்டி கார்டு,டீலர் கார்டு, நான் டிராவல் கஸ்டமைஸ்டு சொல்யூஷன் மற்றும் ஏவியேஷன் ஆகியவற்றிற்கு இந்த தேர்வு கிடையாது) | ரூ. 30/ + பரிவர்த்தனைத் தொகையின் 2.5% |

எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பாக நீங்கள் தொடர்பு கொள்ளப்படுவது உங்களுக்கு விருப்பமில்லையென்றால், www.hdfcbank.com என்ற எங்கள் இணையதளத்தில் லாக் இன் செய்து, எங்களின் 'டோன்ட் கால் ரெஜிஸ்ட்ரேஷன்' தேர்வில் உங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## 24-மணிநேர கஸ்டமர் கால் சென்டர்கள்

அகமதாபாத் / பெங்களூரு / சென்னை / தில்லி மற்றும் என் சி ஆர் / ஹைதராபாத் / கோல்கத்தா / மும்பை / புனே - 6160 6161

சண்டிகர் / கொச்சி / இந்தோர் / ஜெய்ப்பூர் / லக்னோ - 6160 616

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆந்திரப் பிரதேசம் | : 99494 93333 | மத்தியபிரதேசம்/ சத்திஸ்கர் | : 98936 03333 | ராஜஸ்தான் | : 98750 03333 |
| அஸ்ஸாம் | : 99571 93333 | மகாராஷ்டிரா (மும்பை தவிர்த்து) மற்றும் கோவா | : 98906 03333 | தமிழ்நாடு/பாண்டிச்சேரி | : 98406 73333 |
| குஜராத் | : 98982 71111 | ஒரிஸா | : 99379 03333 | உத்திரப் பிரதேசம்/ உத்தராகண்ட் | : 99359 03333 |
| ஹரியானா | : 99962 43333 | பஞ்சாப் | : 98153 31111 | மேற்கு வங்காளம்/சிக்கிம்/ அந்தமான் மற்றும் நிக்கோபார் | : 98310 73333 |
| கர்நாடகா | : 99458 63333 | | | பிஹார் / ஜார்கண்ட் / பட்னா | : 1860 266 6161 |
| கேரளா | : 98956 63333 | | | ஜம்மு மற்றும் கஷ்மீர் / ஹிமாச்சலப்பிரதேசம் (பி எஸ் என் எல் லேண்ட்லைனிலிருந்து டோல்-ஃப்ரீ) | : 1800 180 4333 |
| | | | | மேகாலயா / திரிபுரா /நாகாலாந்து / மிஸோரம் /அருணாச்சல பிரதேசம் / மணிப்பூர்(பி எஸ் என் எல் லேண்ட்லைனிலிருந்து டோல்-ஃப்ரீ) | : 1800 103 9733 |

[illegible] டோல் ஃப்ரீ எண்: 1800 425 4332

ஆக்ரா / அஜ்மீர் / அலஹாபாத் / பரேலி / புவனேஷ்வர்/ பொக்காரோ / கட்டக் / தன்பாத் / டேராடூன் / ஈரோடு / குவஹாத்தி / ஹிஸார் / ஜம்மு மற்றும் ஸ்ரீநகர் / ஜம்ஷெட்பூர் / ஜான்ஸி / ஜோத்பூர் / கர்னால் / கான்பூர் / மதுரை / மங்களூர் / மதுரா / மீரட் / மொராதாபாத் / முஸஃபர்பூர் / மைசூர் / பானி / பட்டியாலா / ராஜ்கோட் / ராஞ்சி / ரூர்கேலா / சேலம் / சிம்லா / சிலிகுரி / சில்வாஸா / சூரத் / திருச்சி / உதய்பூர் / வாரணாசி / வாஸ்கோ

எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் குறித்து உங்களுக்கு அழைப்புகள் வர வேண்டாம் என்றால், தயவு செய்து www.hdfcbank.com என்ற எங்கள் இணையதளத்தில் லாக் ஆன் செய்து, எங்களின் Don't call Registration option-ல் பதிவு செய்து கொள்ளுங்கள். சமீபத்திய ஸ்டேட்மெண்ட்டில் பேமெண்ட் தாமத கட்டணங்கள் வசூலிக்கப்பட்ட கார்டு அக்கவுண்டிற்கு, கேஷ் பிராசஸிங் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

MITC_Ver_1.3 Aug' 16

HDFC BANK

We understand your world